**மினிபே பிரதேச சபை**
**கண்டி**
**மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31திகதியும்,முன்னையஆண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31திகதியும் கணக்காய்விற்குசமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம

இந்தஅறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளவிடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்துமினிபேபிரதேசசபையின்2016திசெம்பர் 31 இல் உள்ளவாறானநிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்தஆண்டிற்கானஅதனதுநிதிசார்செயலாற்றலினையும் இலங்கைபொதுத்துறைகணக்கீட்டுநியமங்களுக்கு இணங்கஉண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றனஎன்பதுஎனதுஅபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதானகருத்துரைகள்

#### 1.3.1 இணக்கஞ் செய்யப்படாதகட்டுப்பாட்டுக் கணக்குகள்

4கணக்குவிடயங்கள்தொடர்பாகநிதிக்கூற்றுக்களில்காட்டப்பட்டமீதிகளின் கூட்டுத்தொகைரூபா42,828,296ஆனபோதும்,துணைப்பதிவேடுபிரகாரம் அம் மீதிகளின் கூட்டுத்தொகைரூபா42,625,522ஆனமையால் ரூபா219,644ஆன இணங்காமைகாணப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டியமற்றும் செலுத்தவேண்டியகணக்குகள்

**(அ) பெறவேண்டியகணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்குபெறவேண்டிய5 கணக்குமீதிகளின் கூட்டுப் பெறுமதிரூபா15,683,659ஆனதுடன்அவற்றில் ஓராண்டைவிஞ்சியகணக்குமீதிகளின் கூட்டுத்தொகைரூபா 5,930,209 ஆனது.

(ஆ) **செலுத்தவேண்டியகணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்குசெலுத்தவேண்டிய5 கணக்குமீதிகளின் கூட்டுப் பெறுமதிரூபா27,317,916 ஆனதுடன்,அவற்றில் ஓராண்டைவிஞ்சியகணக்குமீதிகளின் பெறுமதிரூபா 9,387,496 ஆனது.

#### 1.3.3 கணக்காய்விற்கானசான்றுகளின்மை

தேவையானதகவல்கள் கணக்காய்விற்குசமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகைரூபா54,232,732ஆனகொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போதுதிருப்தியுடன் ஆய்வுசெய்யமுடியாமல் இருந்தது.

#### 1.3.4 சட்டங்கள்,விதிகள் மற்றும்பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள்,விதிகள் மற்றும்பிரமாணங்களுடன்இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போதுஅவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
|---|---|---|
| | ---------------------------------------------------- | -------------------- |

| | | |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்கபிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு | காணிகட்டிடங்கள்,பொதுமக்கள் கூடம், இடுகாடு,என்பன 54 இன்உரிமையைதீர்த்துக்கொள்ளநடவடிக்கைஎடுக் கப்பட்டிருக்கவில்லை. |
| | | |
| (ஆ) | 2012 செப்டம்பர் மாத இலக்கம் என்பீ/ஆர்டிசி/டிஆர்/எல்எம்/12/07கொண் டமுச்சக்கரவண்டிசேவையைமுறையாக்கு தலுக்காகவேலைத் திட்டமொன்றைஅறிமுகப்படுத்துதல் எனும் அமைச்சரவைமசோதாவில் குறிப்பிடப்படும் கொல்கைதிட்டம். | முச்சக்கரவண்டிநிறுத்துமிடம்அமைத்துபதிவுசெய்து அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையொன்றைகடைப்பிடிக்கவேண்டியபோது ம் அவ் ஆலோசனைகள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | உள்ளூராட்சிஆணையாளரின்2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 சுற்றறிக்கையின் 5ஆம் பந்தி | கடையறைகள் 5 வருடங்களுக்குஒருமுறைமதிப்பீடுசெய்யப்பட்டுஒப்ப ந்தத்தைபுதுப்பிப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டிரு க்கவில்லை. |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானமீண்டுவரும் செலவுகளைவிஞ்சியவருமானம் ரூபா7,202,234ஆனதுடன்,அதற்குநேரொத்தமுன்னையஆண்டின் மீண்டுவரும் செலவுகளைவிஞ்சியவருமானம் ரூபா3,064,413ஆனமையால் முன்னையவருடத்திற்குஒப்பாகநிதிவிளைவுகளில் ரூபா4,137,821 ஆனவளர்ச்சியொன்றுகாட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியானநிதிமீளாய்வு

நிதிவிளைவுகளில் ரூபா4,137,821 ஆனவளர்ச்சிக்குவியாபாரவரிரூபா441,849அதிகரிப்பும்,அரசமீண்டுவரும் அன்பளிப்புரூபா2,553,154உம்,வாடகைவருமானம் ரூபா494,998 அதிகரித்தலும் மற்றும் சேவைக்கானகட்டணம் ரூபா 845,059 அதிகரித்தல்பிரதானமாகதாக்கம் விளைவித்திருந்தது.

### 2.3 செயற்பாட்டு மூலதனமுகாமைத்துவம்

மீளாய்வாண்டுமற்றும்முன்னையஆண்டில்மொத்தநடைமுறைசொத்துக்கள்மற்றும் மொத்தநடைமுறைபொறுப்புக்களிற்கு இடையில் விகிதம் முறையே 1.5 : 1 மற்றும் 1.2: 1ஆனது.

### 2.4 வருமானநிருவாகம்

#### 2.4.1 வீதவரி

மீளாய்வாண்டுசனவரி 31 திகதிக்குநிலுவைவீதவரிமீதிரூபா 461,669 ஆனதுடன் அவற்றில் ஆண்டினுள் ரூபா 205,788 மாத்திரமஅறவிடப்பட்டிருந்தது. அதுமொத்தநிலுவையின் 44 சதவீதமாகும்.

#### 2.4.2 குத்தகைவாடகை

(அ) மீளாய்வாண்டுஆரம்பத்தில் நிலுவைமீதிரூபா2,356,014ஆனதுடன்,ஆண்டின் பற்றுச்சீட்டிடல் ரூபா 1,088,588 ஆனது. அவற்றில் ஆண்டினுள்நிலுவையின் ரூபா 222,136 மற்றும் பற்றுச்சீட்டிடலின் ரூபா 401,840 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஹசலகநகரில் நீதிமன்றஅலுவலகம்மொன்றைநடாத்திச்செல்லவாடகைக்குவழங்கப்பட்டகட்டிடத்திற்காகபெ

றவேண்டியரூபா 103,503 ஆனதொகைஅறவிடுவதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 ஏனைய வருமானம்**

(அ) மீளாய்வாண்டுஆரம்பத்தில் ரூபா 2,193,884ஆனநிலுவைநீர் கட்டணமீதியில் ஆண்டினுள்ரூபா 1,223,605 ஆனதொகைமாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதுமொத்தநிலுவையின் 55 சதவீதமானது. மீளாய்வாண்டுதிசெம்பர் 31 திகதிக்குநிலுவைநீர் கட்டணமீதிரூபா 1,792,587 ஆனதுடன்,அம் மீதியினுள் ஓராண்டைவிஞ்சியரூபா 970,279 ஆனமீதிஉள்ளடங்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டுசனவரி 31 திகதியில் நிலவியரூபா 99,529 ஆனகளியாட்டவாடகைமீதியைமீளாய்வாண்டிலும் அறவிடநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

நீதிமன்றதண்டப்பணம்மற்றும் முத்திரைகட்டணமாகமீளாய்வாண்டுதிசெம்பர் 31 திகதிக்குரூபா1,287,200 அறவிடப்படவேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டுமீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹசலகவாராந்தசந்தையில் பயன்படுத்தப்படாதகட்டிடங்கள் இருக்கும் போதுமீளாய்வாண்டில் ரூபா 600,000 செலவுசெய்து300 சதுரஅடிஅவிலானகட்டிடமொன்றுநிர்மானிக்கப்பட்டிருந்தது. மரக்கறிவியாபாரிகள் தொகைச் சந்தைனுள் தற்காலிககூடாரங்களில்மற்றும் பாதையின் இருப்புறமும் வியாபாரம்மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்,மரக்கறிவியாபாரிகளுக்காககட்டிடங்கள் நிர்மானித்துவழங்குவதற்குசபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைஅதிகாரபிரதேசமக்களின் பொதுவசதிகளைமேம்படுத்தல் பிரதேச சபை யொன்றினால் மேற்கொள்ளப்பட்டவேண்டியபிரதானசெயற்பாடானபோதும்,கால்வாய்த் தொகுதிசுத்தம் செய்தலும்,நகரைசுத்தமாகவைத்துக் கொள்ளல் தொடர்பில் சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீண்டுவரும் வருமானத்தின் குறைந்தபட்சம் 30 சதவீதம் சபை அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைக்காக ஈடுபடுத்த வேண்டியபோதும், மீளாய்வாண்டின் ரூபா 12,101,605 ஆன மீண்டுவரும் வருமானத்தினால் 15 சதவீதம் மாத்திரம் பிரதேச அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 4 பதவிகளில் 14 வெற்றிடங்கள் நிலவியதுடன், அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**ஆ)** ஹசலக நகரத்தில் அமைந்துள்ள 20 கடையறைகளில் குத்தகைகாரர்களால் தொடர்ந்து செலுத்தப்படாமையிருந்த கடையறை வாடகை ரூபா 2,810,646 தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டி ஏற்பற்றிருந்தது.

(இ) 2014 ஆண்டில் பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு கிடைத்திருந்தரூபா 160,682 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் பொதுவைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2013 ஆண்டில் உள்ளூராட்சி வார வெற்றி மற்றும் 2014 மத்தியநாடு மாகாண நவ விருது வழங்கும் வைபவத்திற்காக கிடைத்திருந்த ரூபா 115,000 ஆன தொகயை பயன்படுத்தாது பொதுவைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 75,900 பெறுமதியான 33 நீர் மாணிகள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் இடப்பட்டிருந்தது.

(ஆ) வியாபாரமற்றும் வீட்டுநீர் பாவணையாளர்களில் முறையே 86 இற்கு மற்றும் 1213 இற்கும் நீர் வழங்கப்பட்டிருந்த போதும் அவற்றில் 36 வியாபார மற்றும் 891 வீட்டு பாவணையாளர்களுக்கு மாத்திரம் நீர் மாணி பொருத்தப்பட்டிருந்தன.

## 3.4 பயனற்ற/குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

---

3 வருடங்களிலிருந்து இலக்க CP 270-0270 கொண்ட டெபே டெக்டர் மற்றும் இலக்க LE-7543 கொண்ட மஹேன்ட்ர லொரி வண்டியை பயன்படுத்தாது செயலற்று காணப்பட்டது.

## 3.5 இனங்காணப்பட்டநட்டங்கள்

---

சபைக்குசொந்தமானகாணியொன்றில் இடப்பட்டிருந்ததனியார் ஒருவரின் அஸ்திவாரத்தைஅகற்றுவதற்குரூபா 24,709 ஆனபொறி இயல் மதிப்பீடொன்றுவழங்கப்பட்டிருந்தபோதிலும்,அத் தொகையைசெலுத்திருக்கவில்லை.அதனால் பாதிக்கபப்பட்டதரப்பினரால் முன்னால் தலைவர் மற்றும் பிரதேசசபையைகுற்றஞ்சாட்டப்பட்டுகண்டிமாவட்டநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமுறைபாட்டாளருக்குரூபா 500,000 ஆனதொகைமற்றும் அதுதொடர்பானநீதியானவட்டிசெலுத்த வேண்டிஎன 2005 ஆண்டின் தீர்ப்புவழங்கப்பட்டிருந்தபோதிலும்,பிரதேச சபை பணம் செலுத்தாமைகாரணமாக,பிரதேசசபைக்குசொந்தமான இலக்கம் 252-6524 கொண்ட மிற்சுபிசிகெப் வண்டி மற்றும் ஹசலகநகரில் இலக்கம் 14 கடையறையைநீதிமன்றபொறுப்பிற்குஎடுக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்தினால் தடைசெய்யப்பட்டகெப் வண்டி 2016 திசெம்பர் 31 திகதிஅன்றும் இயற்கைஅநர்த்தத்திற்குல்லாகி சபை வளவில்துருப்பிடித்தவன்னம் இருந்தது.

## 3.6 ஒப்பந்தக் கட்டுப்பாடு

---

### (அ) பலுகொல்லநீர் உத்தேசமுறைகளஞ்சியதாங்கியைசுற்றிவேலிஅமைத்தல்

---

2016 ஆண்டில் மத்தியமாகாணபிரதானஅமைச்சின் உதவிமக்கள் நீர்-வேலைதிட்டத்தினகீழ் பலுகொல்லநீர் தாங்கியைசுற்றிவேலிஅமைக்கும் வேலைக்காகரூபா 211,748 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாகபின்வரும் விடயங்கள் அவதான்க்கப்பட்டன.

(i) வேலைவிடயம் இலக்கம் 1 ன் பிரகாரம் 1:2:4 (19) சிமேந்துகொன்கிரிட் கலவையால் 6 உயரஅடி 8 அடிக்கிஒர் கம்பி தூன், ஸ்தாபித்து முற் கம்பி 6 வரிகள் இருக்கும் வாறுவேலிசெய்யப்படமீட்டர் 76. 50 நீளத்திற்காகரூபா 104,499 செலுத்தப்பட்டிருந்தபோதும்,பலமற்றகம்பி தூன் உபயோகித்துவேலி அமைக்கப்பட்டிருந்தது. தூனின் கீழ் பகுதிதடிப்பு 6'' 6''மற்றும் மேல் பகுதிதடிப்பு 4'' 4'' இருக்கவேண்டியபோதும், இங்குகீழ் பகுதி 5''4''மற்றும் மேல் பகுதி 4 எனறவாறு இருந்தமையால் மதிப்பீட்டுநியமத்தின் பிரகாரம் வேலிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வேலைவிடயம் இலக்கம் 10 ன் பிரகாரம் வேலி தூன்மற்றும் நுலைவாயில் தூன் ஸ்தாபித்தலுக்கு மி.மி 225 ஆலத்திற்குகல்லைதுலைத்து மி.மி.12 அளவிலானமற்றும் மி.மி. 525 நீளகம்பிபாவித்துதுன் ஸ்தாபித்தலுக்காகரூபா 17,800 செலுத்தப்பட்டபோதும் உபதேசங்கலின் பிரகாரம் கம்பி தூன் நடப்படாமைகாரணத்தால் எல்லாகம்பி தூன்களையும் இலகுவில் அகற்றுவதற்குமுடியுமாக இருந்தது.

**(ஆ) வாசிகசாலைமுன்னால் சிறுவர் பூங்காநிர்மானிப்பதல்**

2016 பெப்ரவரி 29திகதியமற்றும் 1/2016 இலக்கம் கொண்டமாகாண சபை மற்றும் உள்ளுராட்சிஅமைச்சின் செயளாலரின் பிரதேச சபை வழுவூட்டல்தொடர்பானசுற்றறிக்கைபிரகாரம் அமுழ்படுத்தப்படமுடியாதகருத்திட்டமொன்றானஹசலக நூலகசாலைவளவிற்குசதுரக்கல் பதித்தல்,கொன்கிரிட் வேலிஅடிப்பதற்காகரூபா 499,745 ஆனதொகைசெலவடைப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவினவிடயங்கள் இடையில்,ஒதுக்கீடுமாற்றியும் பாதீடுமற்றும் உள்ளவாறானவருமானம் மற்றும் செலவினம் இடையில்,போதியளவுவிலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடுஆக்கபூர்வமானமுகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாகபயன்படுத்தப்பட்டிருக்கவில்லைஎனஅவதானிக்கப்பட்டன.

(அ) 11செலவினவிடயங்களுக்காகஏற்படுத்தப்பட்டரூபா 3,555,000 ஆனஒதுக்கீடுகளின் எவ்விதசெலவும்மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 7வருமானவிடயங்களுக்காகமதிப்பிடப்பட்டரூபா 395,000 ஆனவருமானத்தின்எவ்விதவருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கானபெறுகைகள்திட்டமொன்றுதயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் சபையின் போதியளவுஉள்ளகக் கணக்காய்வொன்றுசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாகசபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையானசொத்துக்கள்.
(ஆ) கணக்கீடு.
(இ) வாகனகட்டுப்பாடு.
(ஈ) வருமானநிருவாகம்.
(உ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.
(ஊ) ஒப்பந்தக் கட்டுப்பாடு.